கவிஞர் சூரியநிலாவின்

# சிற்பிகள்



## கவிதை தொகுதி



புதிய உலகம் காணும்

புதுமைச் சிற்பிகள் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் சூரியநிலாவின்

# சிற்பிகள்

## கவிதைத் தொகுதி



நடமாடும் தெய்வமாயிருந்து என்னை விட்டுப்பிரிந்த



அமரர் ஆ. புஸ்பராணி

அன்புத் தாய்க்கு சமர்ப்பணமாய் . . .

அன்பும் அறிவும் ஊட்டி
அகிலமறிய வைத்தாய்
துன்பம் துயரம் போக்கி
துணையாய் நடத்திச் சென்றாய்
என்றும் தேடுகின்றேன்
எங்கே நீதான் சென்றாய்?

- சூரியநிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்: சிற்பிகள்

ஆசிரியர்: கவிஞர் சூரியநிலா
(ஆ. ஜென்சன் றொனால்ட் B.A.)
0776160302

வெளியீடு: அன்சன் கலையகம்,
உசன், மிருசுவில்.

பக்கங்கள்: 72

பதிப்புரிமை: நூலாசிரியருக்கே

பதிப்பு: 2013 சித்திரை

படங்கள்: சூரியநிலா

பக்க வடிவமைப்பு: கஜானன் பன்முக சேவை
அல்லாரை வீதி, மீசாலை

விலை: ரூபாய் 200.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| கவிதைகள் | பக்கம் |
|---|---|
| 1. சிற்பிகள் | 11 |
| 2. என் அம்மா | 13 |
| 3. ஆசை அப்பா | 15 |
| 4. சுட்டித்தனம் | 17 |
| 5. முயல் | 19 |
| 6. யானை | 21 |
| 7. அகரம் முதல் ஃ வரை | 23 |
| 8. ஆனந்தம் | 25 |
| 9. அதிகாலைச் சேவல் | 27 |
| 10. நன்றியுள்ள நாய் நானே | 29 |
| 11. எங்கள் பற்கள் | 31 |
| 12. புழு நோய் தவிர்ப்போம் | 33 |
| 13. நோய்கள் என்னை நெருங்காதே | 35 |
| 14. நோய்களை விரட்டுவோம் | 37 |
| 15. எறும்பு | 39 |
| 16. பட்டாம்பூச்சி | 41 |
| 17. நிலவு | 45 |
| 18. சூரியன் | 47 |
| 19. நல்லதைச் செய்திடுவேன் | 51 |
| 20. விழித்திரு பாப்பா | 53 |
| 21. சகுனம் | 55 |
| 22. பாடசாலை | 57 |
| 23. மழை | 59 |
| 24. மீண்டுமெழு | 61 |
| 25. விபத்துகள் வேண்டாம் | 63 |
| 26. திருவிழா | 65 |
| 27. ஒற்றுமை | 67 |
| 28. ஆசிரியர் | 69 |
| 29. நிறைவாய் கல்வி பெறவே வருக | 71 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நமது நாட்டில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் சிலவற்றில், காலத்துக்குக் காலம் நல்ல கவிதைகளை எழுதி வருபவர் கவிஞர் சூரியநிலா. "சூரியக்குளியல்" என்ற கவிதைத் தொகுதியையும், "நந்தவனக் காற்று" என்ற ஒலிப்பேழையையும் அவர் இதுவரை வெளியிட்டுள்ளார். இளவயதுப் பிள்ளைகளுக்காக, எளிமைச் சிறப்புடனும், கருத்துக் கவர்ச்சியுடனும் கூடிய அழகான கவிதைகளுடன் வெளியாகின்றது "சிற்பிகள்" என்ற அவருடைய இந்த இரண்டாவது கவிதைத்தொகுதி.

இளம் பிள்ளைகள் அனைவரையும் சிறுவர்கள் எனப் பொதுவாகக் குறிப்பிடும் வழக்கம் ஒன்றுண்டு; இவர்களுக்கென இலக்கியமாக்குவது இலகுவானதன்று என்ற கருத்தும் இலக்கிய உலகில் உண்டு. வயது அடிப்படையில் அவர்களை மழலைகள் (3-5 வயது வரை), பாலர்கள் (6-7 வயது வரை), குழந்தைகள் (8-11 வயது வரை), சிறுவர்கள் (12-15 வயது வரை) என வகைப்படுத்தும் உளவியலாளர் சிலரும் இலக்கிய ஆர்வலர்களும் ஒவ்வொரு பிரிவினரதும் விடுப்பார்வம், கற்பனைப்பாங்கு, அனுபவப்பரப்பு, சொற்செல்வம் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு, அவற்றுக்கு இசைவாக ஆக்கப்படும் இலக்கியங்களே அவர்களின் மகிழ்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் வழி வகுக்கும் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் சூரியநிலா இவற்றை நன்குணர்ந்துள்ளார் என்பதனை அவரது கவிதைகள் காட்டுகின்றன. அத்துடன் தனியாக ஒரே ஒரு வயதுப் பிரிவினருக்கு மட்டும் என்றில்லாமல், அவ்வப் பிரிவினரை விசேடமாகக் கவரக் கூடியவாறு, வெவ்வேறு தரத்திலும் சந்தத்தி லுமான கவிதைகளை ஒரே தொகுதியிலேயே இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்றைய மழலைகளே கால ஓட்டத்தில் பாலர்கள் ஆகி, குழந்தைகளாகி, சிறுவர்களாகி வளர்ச்சிப் பாதையை வளம்படுத்துவார்கள் என்ற உணர்வே எல்லோருக்கும் எல்லாவற்றை யும் வாசிக்கும் வாய்ப்பை, ஒரே தொகுதியிலேயே அவர் ஏற்படுத்தியதற்குரிய தூண்டுதலாக இருக்கலாம்.

கவிஞர் தன் எண்ணத்தை - இலட்சியத்தை வெளிப்படுத்து வதாக "சிற்பிகள்" என்ற நூலின் தலைப்புக் கவிதையும், அந்த இலட்சியத்தின் விரிவையும் விளக்கங்களையும் காட்டுவதாக ஏனைய பல கவிதைகளையும் கொள்ளலாம்.

மழலை மொழி பேசி
மனதை அன்பால் வருடி
குழந்தை ஆக்கி எம்மைக்
குதூகலிக்க வைப்பீர் - என குழந்தைகளுடன் தானும் ஒரு குழந்தையாக மாற விரும்புவதைக் குறிப்பிட்டு அவர்களை தன்பால் கவரும் கவிஞர்,

குறும்புத் தனங்கள் செய்து
குடைந்து கேள்வி கேட்டு – என அவர்களின் இயல்பான போக்கை தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி

நிறைந்த அறிவைத் தேடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதமும் முயற்சி செய்வீர் - என அவர்களுக்கு வழிகாட்டி, அந்த முயற்சி புதியதோர் உலகை அவர்களுக்கு காட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும், காட்டும் என்ற நம்பிக்கையையும் கலந்து

புதிய உலகம் காணும்

புதுமைச் சிற்பி நீங்கள் -

எனப் புகழ்ந்து பாடுகின்றார்.

புதிய உலகம் என்று சொல்வதன் மூலம் கவிஞர் என்ன கருதுகின்றார்?

பெற்றோர், பெரியோர், ஆசிரியர் போன்றவர்களை மதித்து நடக்கும் பண்பு இக்கால இளம் சந்ததியினரிடம் குறைந்து வருகின்றது. மதிக்காமல் இருப்பது மட்டுமல்லாமல் அவர்களை கேலி செய்வதும், அவமதிப்பதும், வீண்பழி சுமத்துவதும் கூட அதிகரித்து வருகின்றன. அறிவிலும் அனுபவத்திலும் மேம்பட்டு, சிறு வயதினரின் நல்வாழ்விலும், முன்னேற்றத்திலும் உண்மையான அக்கறை கொண்டுள்ள அவர்கள் சொல்லும் நல்லுரைகளை சிறுவர்கள் கேட்டு நடக்க வேண்டும்; அவர்களின் நல் ஒழுக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு சிறுவர்களும் ஒழுக வேண்டும்; இந்தக் காலத்திற்குச் சிறிதும் பொருத்தமில்லாத மூடப் பழக்க வழக்கங்களைக் கைவிட வேண்டும். சமுதாய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் துணை செய்யக் கூடிய செயல்களில் ஈடுபட வேண்டும். சுகாதாரப் பழக்க வழக்கங்களை நாள் தோறும் கடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து, நோய் நொடியின்றி வாழ வேண்டும் என்பதையே தெளிவாக தெரிவிக்கின்றன. இன்றைய சிறுவர்களே நாளைய மனிதர்கள் என்பதையும், ஆடுவதிலும் பாடுவதிலும் அவர்கள் அடையும் அளவில்லா இன்பம், திருப்தி போன்றவற்றையும் நன்கு உணர்ந்து கொண்டு, ஓசைச் சிறப்புடைய பாடல்களில் இத்தகைய நல்ல கருத்துக்களை தவழ விட்டிருப்பது, புதிய ஓர் உலகத்தை பூக்கச் செய்யும் என்பது நிச்சயம்.

பிறருடைய விளக்கங்களோ வழிகாட்டலோ இன்றிச் சிறுவர்கள் தாமாகவே வாசித்து இரசிக்கக் கூடிய வகையில் ஆக்கப்பட்டுள்ள கவிதைகள், அவர்களுடைய உள்ளங்களிற் பதிந்து, உரிய நேரத்தில் சரியான வழியைக் காட்டும் என்பதையும் குறிப்பிடுதல் அவசியம்.

இளவயதினருக்கு மகிழ்ச்சியூட்டி அவர்களை நல்வழிப்படுத்து வதற்கு தன் கவி ஆற்றலை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் பயன்படுத்தி வரும் கவிஞர் சூரியநிலா அவர்களை வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

*கந்தரோடை* **சிற்பி. சிவசரவணபவன்.**
*சுன்னாகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மழலைகள், பாலர்கள், குழந்தைகள், சிறுவர்கள், விடலைகள் என்ற மாணவ வளர்ச்சிப் பருவத்தில் தேடலின் வேர்கள் பரவி வளரும் காலம். கேள்விகளும், ஆராய்ச்சிகளும், விமர்சனங்களுமாய் அறிவுக்குள்ளே ஆகாரம் தேடும் வேகம்.

தேடலின் வேர்களுக்கு தேவையான போசணையை சமூகமெனும் செழுநிலமே வழங்க வேண்டியது அதன் கடமையாகும்.

அறிவு சார் வல்லுநர்களும், அழகியல் சார் விற்பனர்களும் இந்தப்பருவத்தினருக்கு தீனி போடத் தவறக்கூடாது.

இலக்கிய உலகில் கவிதையே சிறப்பானதாகப் போற்றப் படுகின்றது. இந்தக் கவிதைக்குள்ளேயே இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் முளைவிட்டுக் கிடக்கின்றது.

எனவே இந்த இலக்கியச் செறிவுசார் கலைக்கும், கலை வடிப்பவர்க்கும் ஒரு கடமையும் கூட காத்துக் கிடக்கின்றது.

கவிதைகளை அழகுணர்ச்சி பொதிந்தவையாகவும் அதற்காக மட்டுமே பிரசவிக்கப்படுபவையாகவும் அநேக இலக்கிய வடிவங்களும், வெளியீடுகளும் எமக்கு கிடைக்கின்றன.

எதிர்காலத்தை சிருஷ்டிக்கப் போகும் சிற்பிகளாகிய மழலைகளுக்கும், பாலர்களுக்கும், குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும், விடலைகளுக்கும் தனியே அழகுணர்ச்சியையும், பொய்மையையும் கவிதைகளுடே ஊட்டுவதை விட அழகுணர்ச்சியோடு அறிவியலையும் யதார்த்தையும், முற்போக்கு சிந்தனைகளையும் சேர்த்தே புத்தாக்கங்களாகப் பூப்பிக்கும்போது சிற்பிகளின் விரல் முனைகளுக்கு மட்டுமன்றி மூளையினுள்ளேயும் முன்னேற்ற முளையங்கள் வளரத்தொடங்குமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அவாவின் வெளிப்பாடாக ஒவ்வொரு பருவ நிலையினுள்ளும் புகுந்து மூடத்தனத்தை கருவறுத்து முன்னேற்ற விதை விதைக்கும் ஒரு சிறு வேளாண்மை முயற்சியே இந்த "சிற்பிகள்" பிரசவம்.

இந்த "சிற்பிகள்" பிரசவத்தை முதலில் தனது கையிலேந்தி கூர்ந்து கவனித்து ஆலோசனைகளை அள்ளி வழங்கியவரும் ஒரு சிற்பிதான்.

ஆம்! அவர்தான் சிற்பி சிவசரவணபவன் ஐயா அவர்கள் மூதறிஞர் அவர்தம் சிரமம் பாராது மிகுந்த சிரத்தையோடு கரும மாற்றி வழிகாட்டல்களை வழங்கியமைக்கு என்றும் இதயத்தால் நன்றிகளைப் பூப்பிக்கின்றேன்.

"சிற்பிகள்" பிரசவத்திற்கான தயார்ப்படுத்துதலில் அருகிருந்துதவிய அனைத்து அன்புள்ளத்தினருக்கும் கஜானன் பன்முக சேவை அச்சகத்தாருக்கும் என்றென்றும் நன்றிகள்.

அழகும் அறிவும் கருக்கொண்டு
அருமைக் கலையது பிறக்கட்டும்
பழகும் நல்ல உறவுகளுள்
பாசம் நிறைந்தே வழியட்டும்
இளகும் நல்ல மனதோடு
இயல்பாய் அறிவியல் கலக்கட்டும்
வளமும் வாழ்வும் ஒன்றாகி
வசந்தம் என்றும் வீசட்டும்.

**சூரியநிலா**

**(ஆ. ஜென்சன் றொனால்ட்)**

*உசன், மிருசுவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பிகள்



மழலை மொழிகள் பேசி
மனதை அன்பால் வருடி
குழந்தை ஆக்கி எம்மைக்
குதூகலிக்க வைப்பீர்!

குறும்புத் தனங்கள் செய்து
குடைந்து கேள்வி கேட்டு
நிறைந்த அறிவைத் தேடி
நிதமும் முயற்சி செய்வீர்!

வரம்பு ஏதும் இன்றி
வசந்த இதயத்தோடு
பரம்பி விரியும் உங்கள்
பரிசுத்தமாம் வாழ்வு!

எதிர் காலமதை வடிக்க
இன்றே எழுந்து வருவீர்
புதிர்கள் கொண்ட உலகில்
புதுமை செய்து வாழ்வீர்!

புதிய உலகம் காணும்
புதுமைச் சிற்பிகள் நீங்கள்
எதிலும் மடமை களையும்
எழுச்சி பெற்று வாழ்வீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா



அன்பு மொழி பேசி
அரவணைத்து மகிழ்ந்து
இன்பம் சேர்க்கும் அம்மா-என்
இதயம் கவர்ந்த அம்மா

துன்பம் வரும் போது
தூக்கி என்னைக் காத்து
என்னோடு இருக்கும் அம்மா-என்
அன்புத் தெய்வம் அம்மா

தேறி வளரும் வரையும்
தேனாய்ப் பாலை ஊட்டி
ஊறு தடுக்கும் அம்மா-என்
ஊன்று கோலும் அம்மா

வீறு கொண்டு நானும்
வீரிட்டழும் போது
ஆறுதல் தரும் அம்மா - என்
ஆசைப் புதையல் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை அப்பா

அன்புத் தோழன் அப்பா
அணைத்துத் தாங்கும் அப்பா
பண்பை ஊட்டும் அப்பா
பணிவைக் புகட்டும் அப்பா



அறிவை அளிக்கும் அப்பா
அறத்தைக் காக்கும் அப்பா
நெறியில் நடத்தும் அப்பா
நேசம் நிறைந்த அப்பா

முதுகில் சுமக்கும் அப்பா
முன்னே நடக்கும் அப்பா
புதுமை பேசும் அப்பா-என்
புதிய உலகம் அப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டித்தனம்

பட்டாம் பூச்சிகள் பறக்குது பார்
பஞ்ச வர்ணம் தெரியுது பார்

சிட்டுக் குருவிகள் பறக்குது பார்
சிறுவரின் சுதந்திரம் தெரியுது பார்

எட்டித் தாவும் அணில்களைப் பார்
எழிலாய் குறும்புகள் செய்யுது பார்


குட்டி போட்ட நாயதைப் பார்
குழந்தைகள் காக்கும் வீரத்தைப் பார்

முட்டி மோதும் ஆடுகள் பார்
முழுதும் சுட்டித் தனமே பார்

எட்டித் தாவும் குரங்குகள் பார்
எதிலும் குறும்புகள் செய்யுது பார்


தொட்டியில நீந்தும் மீன்களைப்பார்
தொலையும் கவலைகள் தொடர்ந்து பார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முயல்




பஞ்சு போன்ற உடலாம்
பளபளக்கும் விழியாம்
கொஞ்சும் சிவந்த மூக்காம்
கொஞ்சம் பெரிய காதாம்

கஞ்சத் தனமாய் வாலாம்
கரகரப்பாய் நாக்காம்
மிஞ்சிப் பாயும் நடையாம்
மிருதுப் புல்லு உணவாம்

தஞ்சமானது என் முயலாம்
தடவி வளர்ப்பதுவும்நானாம்
கிட்ட வந்து நீங்கள் என்
குட்டி முயலை பாருங்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை



தூணைப் போன்ற கால்களை
    தூக்கி வைத்து வருகின்றார்
பானை போன்ற வயிற்றையும்
    பார்க்கச் சொல்லி வருகின்றார்

கயிறு போன்ற வாலையே
    காட்டி ஆட்டி வருகிறார்
விசிறி போன்ற காதையும்
    விரித்து வீசி வருகின்றார்

தரமாய் ஓங்கும் தந்தங்கள்
    தகதகக்க வருகின்றார்
உரமே கொண்ட தும்பிக்கையை
    உயர்த்திக் கொண்டே வருகின்றார்



ஓடி வந்து கூடுங்கள்
    ஒதுங்கி நின்றே பாருங்கள்
நாடி வரும் யானைக்கிங்கே
    நல்ல தீனி போடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் முதல் ஃ வரை

அன்பிலே ஒழுகு

ஆற்றலைப் பெருக்கிடு

இரக்கத்தைப் பேணிடு

ஈவதை வளர்த்திடு

உண்மையைப் பேசிடு

ஊறுகள் தவிர்த்திடு

எண்ணியே செய்திடு

ஏழையை மதித்திடு

ஐயம் அறுத்திடு

ஒற்றுமைக்கு உழைத்திடு


ஓர் குலம் என்றிரு

ஔடதம் அளவெடு

ஆயுதம்(ஃ) களைந்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம்

கூடி உண்ணும் காக்கை போல
குடும்பம் சேர்ந்து உண்டிடுவோம்.

தேடிச் சேர்க்கும் எறும்புகள் போல
தேர்ந்தே செல்வம் சேர்த்திடுவோம்.

பாடித் திரியும் பறவைகள் போல
பாரிலே மகிழ்வாய் வாழ்ந்திடுவோம்.

ஆடிக் காட்டும் மயிலினைப் போல
அகத்தில் அழகு நிறைத்திடுவோம்.

சாடிக்குப் பொருந்தும் மூடியைப் போல
சரியாய்ப் பொருந்தி வாழ்ந்திடுவோம்.

ஆடிப் பாடும் சிறுவர்கள் நாம்
ஆனந்தமாக வாழ்ந்திடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலைச் சேவல்

அரிவாட் தலைச் சேவலார்
அதிகாரமாய்க் கூவுவார்

குளிர் இருளை ஓட்டவே
கொக்க ரக்கோ கூவுவார்

காலை வேளை தொடங்கவே
கதிரவனைக் கூவுவார்

தோகை வாலைக் கொண்டவர்
தோளின் செட்டை தட்டுவார்

கழுத்தைக் கேள்விக் குறியாக்கி
காண் அழகாய்க் கூவுவார்

இரையைக் கொத்திக் கூப்பிட்டு
இனிய பேட்டைத் தேடுவார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுள்ள நாய் நானே




பந்தைக் கவ்வி விளையாடி
பாலரோடு நான் மகிழ்வேன்
பாசத்தோடு வீட்டிலே
பாதத்தடியில் கிடக்கின்றேன்!

நன்றியுள்ள நாய்நானே
நாளுந் தோறும் காத்திடுவேன்
என்னை எழிலாய் வளர்த்தாலே
ஏற்படாது வீண் தொல்லை!

வஞ்சர் கள்ளர் வந்தால் நான்
வள் வள் என்று கலைத்திடுவேன்
கொஞ்சம் உணவு கொடுத்தாலும்
கொள்ளை மகிழ்வோ டுண்பேனே

நீர்ப்பீ டனமருந்து எனக்களித்தால்
நீர்வெறுப்பு நோய் உமக்கில்லை
வார்த்தை என்னிடம் ஏதுமில்லை
வாலை ஆட்டி நன்றி சொல்வேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எங்கள் பற்கள்

காலை இரவு இருவேளை
    கருத்தாய் பற்களைத் துலக்கிடுவோம்
மூலை முடுக்கு பல்லிடுக்கில்
    முடங்கிக் கிடக்கும் உணவுகளால்
வாலைக் கிளப்பும் பற்சூத்தை
    வன்மம் செய்யும் இதயத்திற்கும்

பற்பசை தூரிகை துணையுடனே
    பற்களைச் சுத்தமாக்கிடுவோம்
பற்பசை கொண்டுள்ள புளோரைட்டால்
    பற்சூத்தையை நாம் ஓட்டிடுவோம்
நற்பயன் பெறுவோம் நோய் கண்டால்
    நல்லதோர் வைத்தியர் நாடிடுவோம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புழு நோய் தவிர்ப்போம்

தோலினூடே புழு சென்று
தொகையாய் குருதியை உறிஞ்சி விடும்
பாலில் விழுந்த நஞ்சாக
பல நோய் பரவ வழி வகுக்கும்
காலில் செருப்பு அணிந்திடுவோம்
கவ்வும் புழு நோய் தவிர்த்திடுவோம்!

உடலில் இரத்தம் சீர் பெறவே
உண்போம் ஈரல் இறைச்சி முட்டை
கடலின் உணவு மீனினமும்
கீரை வகையும் சேர்த்திடுவோம்!

சைவஉணவு தனைக் கொள்வோர்
சத்தாய் பயறு உழுந்துண்போம்
இடவே மறவோம் தேசிப்புளி
இறக்கிய கறியும் ஆறியபின்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்கள் என்னை நெருங்காதே

மணலால் வீடு கட்டிடுவேன்
மாவிலையால் அழகூட்டிடுவேன்
குழியைத் தோண்டி நீரூற்றி
குட்டிக் கிணறும் செய்திடுவேன்


வெற்றுத் தீப்பெட்டிகளாலே
வேலி செய்து மகிழ்ந்திடுவேன்
பயிற்றம் விதைகளைத் தூவியே
பச்சைப் பயிர்களைப் பயிரிடுவேன்

எனது வீட்டில் தோழருடன்
எழிலாய் நானும் விளையாடுவேன்
விளையாட்டெல்லாம் முடிந்தவுடன்
விரும்பியே கைகளைக் கழுவிடுவேன்

சுத்தமான நீர் கொண்டே
தினமும் தாகம் தீர்த்திடுவேன்
சத்துள்ள நல்ல உணவுகளை
சரிவர நாளும் உண்டிடுவேன்

தூய்மை உள்ள மனதுடனே
துணிந்து கருமம் ஆற்றிடுவேன்
நோய்கள் என்னை நெருங்காதே
நாளும் வளர்வேன் திடமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நோய்களை விரட்டுவோம்

வீடு அமைக்கும் முன்னே நீ
விரும்பித் திட்ட மிட்டிடுவாய்
நாடும் நல்ல ஒளி காற்று
நயமாய்ப் புகவே வழி விடுவாய்
படுக்கை அறையின் தளப்பரப்பில்
பங்கு ஏழில் ஒன்றினையே
இடுவாய் யன்னல் வெளியினுக்காய்
இயல்பாய் தூய்மைதனை நுகர்வாய்!

சமையல் அறைக்கு புகைபோக்கி
சரியாய் உயர்த்திக் கட்டிடுவாய்
சுமையாய்க் கழிவுகள் சேராது
சுகமாய் நாளும் அகற்றிடுவாய்
அமைவாய் ஓரிடம் தேர்ந்தெடுத்து
அதிலே இடுவாய் கழிவுகளை
சமையல் மீதி சாம்பலுமே
சரிவர பசளை ஆகிடுமே!

ஆகட்டும் கிணறும் மலக்குழியும்
ஐம்பது அடிகள் இடைவெளியில்
போகட்டும் தொற்று நோயகன்று
பொலிவுடன் வாழ்வாய் நீயுயர்ந்து
வேகட்டும் நீரும் கிருமியின்றி
விரும்பியே நீயும் அதைப்பருகு
சாகட்டும் கிருமிகள் உனையகன்று
சவர்க்காரமிட்டே கை கழுவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பு



முயற்சியதை முன்னே கொண்டு
முடியும் வரை முயலும் எறும்பு
அயர்ச்சி இன்றி சேமிப்பினை
அறிந்தே சேர்க்கும் சிற்றெறும்பு


ஒழுங்கு முறையில் ஓர்மமுடன்
ஒழுகி ஊரும் கட்டெறும்பு
மழுங்கிடாத மகத்துவமாய்
மண் கூடமைக்கும் சிவப்பெறும்பு

வாசப் புலம் ஏற்படுத்தி
வரியாய் ஏறும் கறுப்பெறும்பு
தழைத்த இலைகள் தனைப் பொருத்தி
தன் கூடமைக்கும் முசுறெறும்பு



எறும்புகளின் ஒழுக்கமதும்
ஏது வான சேமிப்பும்
சுறுசுறுப்பின் செயல் வடிவும்
சுட்டிக் காட்டும் எமக்கு வழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாம் பூச்சி




கண்ணைக் கவரும் பூச்சியும் நான்
களிப்பேன் அமுதை உண்டே தான்
வண்ணங்கள் உள்ளது என் மேலே
வடிவங்கள் வந்ததும் அதனாலே

உணரும் கொம்புகள் எனக்கிரண்டு
உறிஞ்சு குழாயும் ஒன்றுண்டு
கணக்குடன் கால்கள் ஆறுண்டு
கண்களில் கூறுகள் நூறுண்டு

போலிக் கண்கள் செட்டைதனில்
போதும் எதிரியை விரட்டிடவே
வேலி மரங்களில் முட்டையிடுவேன்
வெளிவரும் குஞ்சுக்கு அதுவேதீன்

பாதுகாக்கும் நச்சு மயிர்
பட்டதும் க(த)டிக்கும் உடல் முழுதும்
வாது செய்திடும் என் குழந்தை
வந்து தொட்டால் உமக்கு வதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டைகள் முளைத்ததும் படபடப்பு
செம்மையான ஓர் அழகளிப்பு
குட்டையான வான் பறப்பில்
குதூகலிப்பீர் என் படைப்பில்

வண்ணத்துப் பூச்சி நான்தானே
வர்ணங்கள் கண்களில் தந்திடுவேன்
எண்ணத்தில் என்னை நிறைத்தாலே
எண்ணிலா மகிழ்வு தன்னாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவு


வானத் திரையில் வண்ணப் பொட்டு
வனப்பைக் காட்டும் கண்கள் தொட்டு
காணப் பிறக்கும் பாடல் மெட்டு
களிக்கத் திறக்கும் மகிழ்வின் மொட்டு

தேனைப் பாய்ச்சும் பார்வை தொட்டு
தேவை இந்த நிலவாம் சிட்டு
மானைப் போல நெஞ்சில் முட்டு
மலரும் உந்தன் அழகின் கட்டு

வானில் இனிமேல் தேய்வை விட்டு
வகையைப் பாடு பௌர்ணமிப் பாட்டு
நானும் உந்தன் பாடல் கேட்டு
நயந்திடுவேனே இசையை நட்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன்


உலகிற்கு ஊட்டம் தருபவனே
உதயம் தந்திடும் சூரியனே
இரவுக்கு விடுப்பு தருபவனே
நிலவுக்கும் ஒளி தரும் சூரியனே!

உயிர்களின் இருப்புக்கு காரணனே
உஷ்ணத்தை தந்திடும் சூரியனே
அருகில் உள்ள நட்சத்திரனே
அகிலத்தின் நாயகன் சூரியனே!

பயிர்களின் இருப்புக்கு காரணனே
பசுமையை தோற்றிடும் சூரியனே
நாட்களை மலர்த்தும் நல்லவனே
நாளும் ஒளி தரும் சூரியனே!

உலகின் அரசன் பகலவனே
உயிர்களின் இயக்க காரணனே
வலம் வருகின்றோம் பூமியில் நாம்
வல்லவன் உந்தன் ஈர்ப்பாலே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தின் மரஞ்செடி கொடிகளெலாம்
நிதமும் வளர ஒளிதருவாய்
பலவிதமான உயிர் வாழ்வில்
பரவியே உள்ளது உந்தன் சக்தி!

உலவும் கோள்களின் பாதைகளை
உறுதி செய்திடும் காரணனே
நலம்பல செய்வாய் நாநிலத்தில்
நற்பயிர் விளைப்பாய் நம் நிலத்தில்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நல்லதைச் செய்திடுவேன்

தந்தை தாய் சொல் கேட்டிடுவேன்
தரணியில் குருவை போற்றிடுவேன்
சிந்தையில் நல்லதைப் பொருத்திடுவேன்
சிறப்புடன் பெரியோரை மதித்திடுவேன்

முந்தையர் இழி செயல் மறந்திடுவேன்
முழுதாய் மனிதரை அன்பு செய்வேன்
விந்தையாய் எதையும் அறிந்திடுவேன்
விருட்சமாய் அறிவை வளர்த்திடுவேன்

பந்தை அடித்து விளையாடிடுவேன்
பரிவாய் நட்புடன் பழகிடுவேன்
நிந்தை எதுவும் செய்யேன் நான்
நிறைவாய் உயிர்களைக் காத்திடுவேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்திரு பாப்பா

நச்சுப் பிராணிகள் அண்டை
நகரக் கூடாது பாப்பா

இச்சை கொண்டு நீ போனால்
இம்சை செய்துவிடும் பாப்பா


அச்சாப் பாம்பிது என்று
அடைக்கலம் கொடாதே பாப்பா

நட்டுவக்காலி மட்டத்தேள் பூச்சிகள்
நம்பி அணுகாதே பாப்பா

மிச்சம் கடிக்கும் எறும்பதன்
மீது கை வையாதே பாப்பா

நச்சுப் பிராணிகள் பலவுண்டு
நன்றாய்த் தெரிந்துகொள் பாப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகுனம்



பூனை செல்லப் பிராணியது
போனால் காரியம் பிழைக்காது

சுவரில் வாழும் பல்லியது
எவரையும் சொல்லித் திட்டாது


வெற்றுக்குடமோ வெளிர் தலையோ
சற்றும் தீங்கே செய்யாது

ஆந்தை அலறும் இணையதற்காய்
நிந்தை எதுவும் நிகழாது

அரவம் வந்து ஒருபோதும்
வரமாய் பழியதும் வாங்காது

புத்தியைத் தீட்டி விவேகமுடன்
சத்திய வழிநட வாழ்வுனக்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை

அறிவுதனை பெருக்குமிடம் பாடசாலை
அன்பு நன்றாய் நிலைக்குமிடம் பாடசாலை
குறைகள் என்றும் போக்குமிடம் பாடசாலை
கூடிப்பலர் படிக்குமிடம் பாடசாலை

பல்துறைகள் நிறைந்த இடம் பாடசாலை
பண்புகளும் துளிர்க்குமிடம் பாடசாலை
கல்வி ஞானம் ஏற்றுமிடம் பாடசாலை
கலைகள் பல விளையுமிடம் பாடசாலை

ஆளுமைகள் வளர்க்குமிடம் பாடசாலை
ஆனந்தங்கள் பூக்குமிடம் பாடசாலை
தோழமைகள் கிடைக்குமிடம் பாடசாலை
சுகந்தரும் விளையாட்டிடம் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை



கருக்கொண்ட மேகமெலாம்
கடுங்குளிர் காற்றசைவால்
பரந்தெங்கும் மழையாகி
பாருக்கமு தூட்டுது பார்!

பெருமரங்கள் பூஞ்செடிகள்
பூரித்தே நிற்பதைப் பார்
எருப்போட்ட வயல் நிலங்கள்
எழில் கொஞ்சிச் சிலிர்க்குது பார்!

அருள் ஈயும் பயிரினங்கள்
அளித்திடுமே நல் விளைச்சல்
பொருள்விளங்கும் சிந்தை தனில்
பொழி மழையும் வரமெமக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டுமெழு



நாட்கள் எல்லாம் நல்லவையே
நாளிகை எல்லாம் பெறுமதியே
வாட்டி வதைக்கும் சாத்திரங்கள்
வாழ்வைத் தொலைக்கும் விலக்கிடுவோம்

பிறப்பில் எவர்க்கும் குற்றமில்லை
பிறவியால் பாவம் சேர்வதில்லை
இறக்கும் வரையுள்ள காலமதில்
இதயம் திறந்தே வாழ்ந்திடுவோம்

கோள்களின் இயக்கம் வாழ்வதிலே
கோலம் எதுவும் வரையாது
வீழ்வாய் நீயெனில் முயற்சியதை
விரும்பிச் செய்து மீண்டுமெழு

திசைகள் எட்டும் தீமைகளை
திரட்டித் தரவே திகழாது
வசைகள் பாடும் வாயதனை
வழிகள் சொல்லப் பயன்படுத்து

சாத்திரம் கேட்டே நீவாழ்ந்தால்
சகதியாய் மாறும் உன்வாழ்வு
சூத்திரம் இதுதான் என்றுணர்ந்து
சுகித்திடு வாழ்வை நல்வழியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துகள் வேண்டாம்




பாதை ஓரம் நடக்கையிலே
பயணிப்போமே வலது பக்கம்
வாகனங்கள் செலுத்துகையில்
வகையாய் இடது புறம் செல்வோம்

பாடசாலை முன்னே உள்ள
பாதைக்கடவை மதித்திடுவோம்
நடந்தே சிறுவர் கடப்பதற்கு
நயமாய்க் காத்து நின்றிடுவோம்




வைத்திய சாலை முன்னாலே
வாகன ஒலியை தவிர்த்திடுவோம்
பெரிய வீதியை அணுகுகையில்
மெதுவாய்க் காத்து அணுகிடுவோம்

நோயாளர் காவு வண்டியது
விரைந்தே செல்ல வழிவிடுவோம்
வேகம் வேண்டாம் தவிர்த்திங்கு
விவேகம் கொண்டே ஓட்டிடுவோம்




விபத்து குறித்து காவலர்க்கு
விரும்பியே விபரம் கொடுத்திடுவோம்
வீதியின் விதிகளைக் கடைப்பிடித்து
விபத்துகள் இன்றிப் பயணிப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழா

உறவுகள் கூடி வடம் பிடித்து
உருளுதுபார் எம் அழகுத்தேர்
திறவு கோல் நல் ஒற்றுமை தான்
சேர்ந்து திழைப்போம் மகிழ்ச்சிதனில்

போட்டி பொறாமை ஏதுமின்றி
பொலிவுடனே திரு விழாச்செய்து
நாட்டில் என்றும் நாட்டிடுவோம்
நல்ல உறவுத் தொடர்புகளை

சண்டை பகையை விரட்டிடுவோம்
சந்நிதி புனிதம் காத்திடுவோம்
அண்டை அயலில் உள்ளோரை
அன்புடன் சேர்த்தே மகிழ்ந்திடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை




உள்ளமெல்லாம் இன்பம் பொங்க
உண்மை அன்பு பெருக்கெடுக்க
கள்ளமில்லா இதயத்தோடு
கலந்து நிற்போம் உறவுகளுள்!

புன்னகையை வீசித் தினம்
புதிய பூக்களாய் மலர்ந்து
இன்னிசை மழலை பேசி நிதம்
இனிப்போம் நல்ல மனங்களிலே

விளையாட்டுடனே கல்வி கற்று
விரும்பும் நலன்கள் பலதும் பெற்று
தளைத்து ஓங்கும் நல்மரமாய்
தலையை நிமிர்த்தி நிற்போம் நாம்

ஒற்றுமைக்கான விழுதுகளை
ஓர்மமுடன் மண்ணில் ஊன்றி
வேற்றுமைக்கான காரணத்தின்
வேரையறுத்து வெற்றி கொள்வோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆசிரியர்

கல்விக் கண்கள் திறக்க
கனவுகளோடு வந்தோம்
சொல்லில் இனிமையோடு
செயலால் கல்வி தந்தீர்

அன்னை தந்தை பாசம்
அனைத்தும் சேர்த்து ஊட்டி
என்னை மகிழ்ச்சியோடு
எழுத்து அறிய வைத்தீர்

வையகத்தில் எம்மை
வகையாய் வாழச் செய்வீர
மெய்யாய்ப் போற்றுகின்றோம்
மேன்மை பெற்று வாழ்வீர.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிஞர் சூரியநிலா
# ஆ.ஜென்சன் றொனால்ட் (B.A)



அழகும் அறிவும் கருக்கொண்டு
அருமைக் கலையது பிறக்கட்டும்
பழகும் நல்ல உறவுகளுள்
பாசம் நிறைந்தே வழியட்டும்
இளகும் நல்ல மனதோடு
இயல்பாய் அறிவியல் கலக்கட்டும்
வளமும் வாழ்வும் ஒன்றாகி
வசந்தம் என்றும் வீசட்டும்.

கஜானனன் பன்முக சேவை அல்லாரை வீதி, மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org